தினமணி

## வேளாண்மை அறிவியல் நிலையத்துக்கு விருது
First Published : 26 Jul 2012 10:33:38 AM IST

காரியாபட்டி, ஜூலை 25: அருப்புக்கோட்டை அருகே கோவிலாங்குளத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண் மைய பல்கலைக்கழகத்தின் கீழ், மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் வேளாண்மை அறிவியல் நிலையம், 2011-ம் ஆண்டுக்கான வேளாண்மை அறிவியல் நிலைய விருதைப் பெற்றுள்ளது. கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக ஆண்டு விழாவில், கரும்பு இனப் பெருக்க நிறுவன இயக்குநர் விஜயநாயரால் இந்த விருது வழங்கப்பட்டது.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 75.03 அடி
First Published : 26 Jul 2012 01:48:19 PM IST

தஞ்சாவூர், ஜூலை 25: மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 75.03 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 560 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,200 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## பூச்சித் தாக்குதல் கட்டுப்படுத்துதல் செயல்விளக்கம்
First Published : 26 Jul 2012 11:47:44 AM IST

செய்யாறு, ஜூலை 25: செய்யாறை அடுத்துள்ள வடமணப்பாக்கம் கிராமத்தில், விவசாய நிலங்களில் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண்மை கல்லூரி மாணவிகள் செவ்வாய்க்கிழமை செயல்விளக்கத்தை செய்து காண்பித்தனர்.
கலவை ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் 4-ம் ஆண்டு மாணவிகள், வடமணப்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் தங்கி விவசாயம் மற்றும் அது தொடர்பான பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

விவசாயிகளின் நிலங்களை நேரடியாகப் பார்வையிட்டு, மகசூலைக் குறைக்கும் நோய் மற்றும் பூச்சித் தாக்குதல், பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் மாற்றங்கள் குறித்து கேட்டறிந்தனர்.

கறவை மாடுகள் வளர்ப்போருக்கு நாளை இலவசப் பயிற்சி வகுப்பு
First Published : 26 Jul 2012 03:50:53 PM IST

காஞ்சிபுரம், ஜூலை 25: மாடுகளின் மலட்டுத் தன்மையும் அதற்கான தீர்வும் குறித்த இலவச ஒரு நாள் பயிற்சி வெள்ளிக்கிழமை காஞ்சிபுரத்தில் நடைபெற உள்ளது.
இது குறித்து காஞ்சிபுரத்தை அடுத்த ஏனாத்தூர் உழவர் பயிற்சி நிலைய தலைவர் கன வெங்கட சுதாகர் ராவ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:
கறவை மாடுகள் வளர்ப்பில் இனவிருத்தி, பராமரிப்பு ஆகியன பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது. பசுக்கள் பால் கறப்பதற்கு முதலில் அவை கருத்தரித்துக் கன்று ஈன வேண்டும்.
எனவே கறவைப் பசு வளர்ப்பில் இனவிருத்தி என்பது மிகவும் கவனம் செலுத்த வேண்டிய ஒன்றாகும். கிடேரிகள் இளம் வயதிலேயே சினையாவதும், பசுக்கள் ஆண்டுக்கு ஒரு முறை கன்று ஈனுதலும் பண்ணைப் பொருளாதாரத்துக்கு முக்கிய அம்சமாகும்.
எனவே மாடுகளில் ஏற்படும் மலட்டுத் தன்மையும் அதன் தீர்வுகளும் என்ற தலைப்பில் ஒருநாள் இலவச பயிற்சி வகுப்பு காஞ்சிபுரத்தை அடுத்த ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் பங்குபெற ஆர்வமுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள், உழவர்கள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.
தொடர்புக்கு: பேராசிரியர் மற்றும் தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர், காஞ்சிபுரம் 631 561. தொலைபேசி எண்: 044-27264019.

மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நாளை மருத்துவ முகாம்
காஞ்சிபுரம், ஜூலை 25: காஞ்சிபுரத்தை அடுத்த வாலாஜாபாத்தில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.
இது குறித்து மாவட்ட ஆட்சியர் ஹனீஷ் சாப்ரா வெளியிட்ட செய்திக்குறிப்பு:
÷காஞ்சிபுரம் மாவட்டம் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளை அடையாளம் கண்டு பள்ளியில் சேர்த்தல், தேசிய அடையாள அட்டை மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கான மருத்துவ முகாம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான முகாம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும். வாலாஜாபாத் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

இந்த முகாமில் 18 வயதுக்கு உள்பட்டவர்களை அழைத்து வரலாம். மேலும் குழந்தைகளின் 4 புகைப்படங்கள், அசல் ரேஷன் அட்டை மற்றும் 2 நகல்கள் கொண்டு வரவேண்டும்.

மருத்துவக் குழுவினர் குழந்தைகளை பரிசோதனை செய்து உடனடியாக தேசிய அடையாள அட்டை வழங்குவர். மேலும் உதவி உபகரணங்களும் இந்நிகழ்ச்சியில் வழங்கப்படும் எனச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**சர்வதேச சந்தைகளை விட...இந்தியாவில் பருத்தி விலை 14 சதவீதம் அதிகரிப்பு**

ஜூலை 27,2012,00:34



புதுடில்லி:கடந்த மூன்றாண்டுகளில், முதன் முறையாக, இந்தியாவில் பருத்தி விலை, சர்வதேச விலையை விட, 14 சதவீதம் உயர்ந்துள்ளது. நாட்டில், பருத்தி அதிகளவில் பயிரிடப்படும் மாநிலங்களில், பருவமழை போதிய அளவிற்கு இல்லாவிடில், உற்பத்தி குறைந்து, இதன் விலை மேலும் உயரும் அபாயம் உள்ளதாக ஜவுளித் துறையினர் தெரிவித்தனர்

**இந்தியா:** சர்வதேச பருத்தி உற்பத்தியில், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. உள்நாட்டில் இதன் உற்பத்தியில் குஜராத் முதலிடத்தில் உள்ளது. இங்குள்ள சவுராஷ்ட்ரா மற்றும் கட்ச் பிராந்தியங்களில், வழக்கத்தை விட, நடப்பாண்டு மழைப் பொழிவு, 72 சதவீதம் குறைந்துள்ளது. பருத்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள மகாராஷ்டிராவிலும், போதிய மழையின்மையால் பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநில விவசாயிகள்,

பருத்தி பயிரிடுவதை தவிர்த்து, நெல், கொத்தவரை, பருப்பு வகைகள், கரும்பு உள்ளிட்ட இதர பயிர் சாகுபடியில், கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர். இதனால், இம்மாநிலங்களில், கணிசமான அளவிற்கு, இதன் சாகுபடி பரப்பு குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.
நடப்பு ஜூலை 20ம் தேதி நிலவரப்படி, பருத்தி பயிரிடும் பரப்பளவு, சராசரியாக, 7 சதவீதம் குறைந்து, 83.7 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. நடப்பு 2011-12ம் பருவத்தில் (அக்.,-செப்.,) பெரும்பாலான பகுதிகளில் பருத்தி சாகுபடி முடிவடைந்துள்ளது. இதுவரை சந்தைக்கு, 3.38 கோடி பருத்தி பொதிகள் (ஒரு பொதி=170 கிலோ) வந்துள்ளன.
இது, பருத்தி ஆலோசனை வாரியத்தின் 3.47 கோடி பருத்தி பொதிகள் என்ற மதிப்பீட்டு இலக்கை விட குறைவாகும். அது போன்று, மத்திய வேளாண் அமைச்சகத்தின் மதிப்பீட்டையும் (3.52 கோடி பருத்தி பொதிகள்) எட்டுவது கடினம் என்று கூறப்படுகிறது.
**ஆப்ரிக்கா:**பருத்தி வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை கிடு கிடுவென உயர்ந்து வருகிறது. முன்பேரச் சந்தையில், ஒரு பவுண்டு பருத்தி விலை 88 சென்ட்டாக அதிகரித்துள்ளது. இது, ஆப்ரிக்கா மற்றும் அமெரிக்க பருத்தியின் விலையை விட, முறையே 14 சதவீதம் மற்றும் 10 சதவீதம் அதிகமாகும்.உள்நாட்டு சந்தையில், ஒரு கேண்டி (356 கிலோ) பருத்தியின் விலை, தரத்திற்கேற்ப 34,700 - 45,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.
**ஏற்றுமதி:**மத்திய வேளாண் அமைச்சகம், வரும் பருவத்திற்கு, ஒரு குவிண்டால் பருத்திக்கு, குறைந்த பட்ச ஆதரவு விலையாக, 3,600-3,900 வழங்க பரிந்துரை செய்துள்ளது. நடப்பு பருவத்தில், இதற்கான விலை, 2,200-3,300 ரூபாயாக உள்ளது.சென்ற 2010-11ம் பருவத்தில், நாட்டின் பருத்தி ஏற்றுமதி, 78 லட்சம் பொதிகள் (1 பொதி-170 கிலோ) என்றளவில் இருந்தது. நடப்பு பருவத்தில், இதுவரையிலுமாக இதன் ஏற்றுமதி, 1.30 கோடி பொதிகளை தாண்டியுள்ளது. இவ்வாண்டு துவக்கத்தில் உயர்தர பருத்தி, அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டதை அடுத்து, தற்போது சந்தையில் தரம் குறைந்த பருத்தி வகைகளே உள்ளன.அதனால், பல நூற்பாலைகள், தரமான பருத்தியை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகின்றன. இதன் காரணமாக, நடப்பு பருவத்தில், கடந்த ஒன்பது ஆண்டுகளில் இல்லாத அளவாக, நாட்டின் பருத்தி இறக்குமதி 15 லட்சம் பொதிகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அடுத்த சில தினங்களில் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் பருவமழை தீவிர மடையும் பட்சத்தில், பருத்தி விலை ஒரு நிலைக்கு வரும். அவ்வாறின்றி, மழை பொய்த்தால், வரும் பருவத்தில், பருத்தி உற்பத்தி குறைந்து, விலை மேலும் அதிகரிக்கும்.
**சாகுபடி பரப்பளவு:**மத்திய அரசின் தெளிவற்ற ஏற்றுமதி கொள்கை, குறைந்தபட்ச கொள்முதல் விலை அறிவிப்பதில் தாமதம், கூலி உயர்வு, வட மாநிலங்களில் வறண்ட மற்றும் அதிக வெப்ப நிலை போன்ற காரணங்களால், வரும் பருவத்தில், பருத்தி சாகுபடி பரப்பளவு, நடப்பு பருவத்தை விட, 10 சதவீதம் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிலையில், பருத்தி ஏற்றுமதி குறித்து

மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும், பருத்தி விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,மத்திய அரசுக்கு இந்திய ஜவுளி கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

**விதை தரத்தை அறிய விவசாயிகளுக்கு வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,03:56 IST

திருவள்ளூர் : விதை உற்பத்தியாளர்கள், வினியோகஸ்தர்கள், விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் தரத்தை அறிய திருவள்ளூர் விதை பரிசோதனை ஆய்வகத்தை தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டு உள்ளது.
மாநில அரசின் விதைச் சான்று துறையின் கீழ், திருவள்ளூரில் விதை பரிசோதனை ஆய்வகம் துவக்கப்பட்டு விதைகள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன.
விதையின் முளைப்புத் திறன், புறத்தூய்மை, பிற ரக கலப்பு, ஈரப்பதம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப் படுகிறது.
எனவே, விதையின் தரத்தினை அறிய விரும்புவோர் விதை பரிசோதனை ஆய்வகம், 48 ஜே.என்.சாலை, பெரியகுப்பம், திருவள்ளூர் என்ற முகவரிக்கு, ஒரு மாதிரிக்கு 30 ரூபாய் வீதம் கட்டணம் செலுத்தி, விதை மாதிரிகளுடன் விதை பரிசோதனை ஆய்வகத்தை தொடர்பு கொள்ளும்படி, மூத்த வேளாண்மை அலுவலர் முத்துபெருமாள் தெரிவித்து உள்ளார்.

**விவசாய உரங்கள் கடத்தினால் கடும் நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,01:13 IST

விழுப்புரம்:விவசாய உரங்களை சட்டத்திற்கு புறம்பாக கடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:விவசாய உரங்களுக்கு மத்திய அரசு மான்யம் வழங்கி வருகிறது. நேரடி விவசாய உபயோகத்திற்கு மட்டும் இல்லாமல், தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கலவை உரங்கள் தயாரிக்கும் நிறுவனங்களும் இந்த மான்ய விலை உரங்களை மூலப் பொருளாகப் பயன்படுத்தலாம். ஆனால் தொழிற்சாலை உபயோகத்திற்கு உரங்கள் பயன்படுத்துவோர் டெக்னிக்கல் கிரேடு யூரியாவை மட்டும் பயன்படுத்த வேண்டும். மற்ற உரங்களான டி.ஏ.பி., பொட்டாஷ் போன்றவை தொழிற்சாலை முகவர்களிடமிருந்து வாங்கி பயன்படுத்த

வேண்டும்.மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகத்தில் உரங்கள் விலை குறைவாக உள்ளது. மற்ற மாநிலங்களுக்கு தமிழகத்திலிருந்து உரங்கள் கடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

**ஆயிரம் ஏக்கரில் தீவன புல் வளர்க்க ஏற்பாடு; கால் ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் மானியம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,01:11 IST

அவலூர்பேட்டை:மேல்மலையனூர் பகுதியில் தெளிப்பு நீர் பாசனம் குறித்து தீவன அபிவிருத்தி திட்ட உதவி இயக்குனர் ஆய்வு செய்தார்.மேல்மலையனூர் பகுதியில் மத்திய, மாநில அரசு நிதியில் 100 சதவீத மானியத்தில் தீவன உற்பத்தி புல் வளர்ப்பு மற்றும் கோ-3, புல் , வேலி ஆகியவை (சேகர், யுவராஜ் ஆகியோர்) பயிரிட்டுள்ளனர். இங்கு தெளிப்பு நீர் பாசன முறை (ரெயின் கன்)பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை சென்னை,தீவன அபிவிருத்தி திட்ட உதவி இயக்குனர் டாக்டர் பிரின்ஸ் கிளெமென்ட் நேரில் ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:விழுப்புரம் மாவட்டத்தில் நடப்பாண்டில் 1000 ஏக்கர் நிலத்தில் கால் ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதம் முழு மானியத்தில் தீவன புல் வளர்த்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.மேலும் மானாவரி பயிராக தீவன புல் சாகுபடி செய்யும் சோளம், மக்கா சோளம், தட்டைபயிறு ஆகியவற்றுக்கு மாவட்டத்தில் 1000 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்படவுள்ளது. முழு மானியத்தில் கால் ஏக்கருக்கு 1300 ரூபாய் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.100 பயனாளிகளுக்கு தீவன புல் வெட்டும் கருவி 50 சதவீதம் மானியத்திலும், 100 பயனாளிகளுக்கு புல் நறுக்கும் கருவி 75 சதவீத மானியத்திலும் வழங்கப்படவுள்ளது. தற்போது திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.விவசாயிகள் இதில் பயனடைய உங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி விவரங்களை அறியலாம் எனக் கூறினார்.ஆய்வின்போது, கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் குருவய்யா, டாக்டர்கள் மோகன், ராஜேந்திரன், சின்னசாமி, மணிமாறன் உடன் இருந்தனர்.

**கரும்பு விவசாயிகள் சங்க மாநில கோரிக்கை மாநாடு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,00:59 IST

கள்ளக்குறிச்சி:தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் மாநில மாநாடு கள்ளக்குறிச்சியில் நடந்தது.மாநிலத்தலைவர் பழனிசாமி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் ஸ்டாலின்மணி வரவேற்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் பாலகிருஷ்ணன் எம்.எல். ஏ., கலந்து

கொண்டு பேசுகையில், நஷ்டத்தில் இயங்கி வரும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை களை மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.மாநாட்டில் கூட்டுறவு ஆலைகளில் ஏற்பட்ட நஷ்டம் குறித்து விசாரணை நடத்த வேண்டும், கூட்டுறவு, பொதுத்துறை ஆலைகளில் நிர்வாகச் சீர்கேடுகளை களைந்து முறைப்படுத்த வேண்டும்.கூட்டுறவு ஆலைகளின் கரும்பு பகுதிகளை தனியார் ஆலைகளிடம் ஒப்படைப்பதை திரும்ப பெற வேண்டும். ஆலைகளில் லாபத்தை அதிகப்படுத்த இணை மின்சாரம், எத்தனால் உப பொருட்கள் தயாரிக்க வேண்டும். தொழி லாளர் காலிபணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.இதில் மாநில நிர்வாகிகள் சின்னப்பா, ரவீந்திரன், சின்னசாமி, ஏழுமலை, ராஜ்குமார், மணி, யோகநாதன், தனபால் பேசினர்.

**ஆடிபட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,03:49 IST

தர்மபுரி: பென்னாகரம் அடுத்த சின்னகடைமடை கிராமத்தில், தோட்டக்கலை துறை சார்பில், ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடந்தது.
தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் முகுந்தன் தலைமை வகித்து, காய்கறி சாகுபடி செய்வதன் அவசியம், காய்கறிகளின் பயன்கள், காய்கறி பயிர்களின் சாகுபடி முறைகள், மகசூல் அதிகரிக்கும் தொழில் நுட்பங்கள், காய்கறி சாகுபடியை ஊக்குவிக்க 50 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள், காய்கறி பயிர்களில் உற்பத்தி திறன் மேம்பாட்டு திடட்ட வழிமுறைகள் குறித்து விளக்கினார். காய்கறிகளை சந்தைப்படுத்தல் குறித்து, உழவர் சந்தை உதவி நிர்வாக அலுவலர் தமிழ்செல்வி விளக்கினார். பயிற்சியில் பலர் கலந்து ö காண்டனர்.

**வரலட்சுமி பண்டிகை: பூக்கள் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,03:44 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில், வர லட்சுமி பண்டிகையொட்டி, பூக்கள் விலை உயர்ந்துள்ளது.
இன்று (ஜூலை 27), வர லட்சுமி பண்டிகை கொண்டாடப்படுகிறது. பெண்கள் இந்த விழாவை, வீடுகளிலும், கோவில்களிலும் சிறப்பாக கொண்டாடுவர். தங்களுடைய மாங்கல்யம் நிலைக்க, பெண்கள், பூக்களை வைத்து இஷ்ட தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் செய்து வழிப்படுவர்.அதனால், நேற்று முதல், உள்ளூர், வெளியூர் மார்க்கெட்களில் பூக்களுக்கு நல்ல

வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இரு நாட்களாக, ஓசூரில் இருந்து அதிகளவு பட்டன்ரோஸ், குண்டுமல்லி, கனகாம்பரம், முல்லி பூக்களை, பெங்களூரு, சேலம், சென்னை, மதுரை மற்றும் கோவை பூ மார்க்கெட்களக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர்.பூக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, ஓசூரில் பூ விலை நேற்று உச்சத்தில் காணப்பட்டது. 100 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ குண்டுமல்லி, நேற்று, 400 ரூபாய்க்கு விற்பனையானது. 400 ரூபாய்க்கு விற்ற கனகாம்பரம், 800 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்ற சாமந்திபூ, 200 ரூபாய்க்கும், 50 ரூபாய்க்கு விற்ற பட்டன் ரோஸ், 120 ரூபாய்க்கும், 100 ரூபாய்க்கு விற்ற முல்லை, 400 ரூபாய்க்கும், 15 ரூபாய்க்கு விற்ற செண்டுமல்லி, 30 ரூபாய்க்கும் 40 ரூபாய்க்கு விற்ற சுகந்தம் பூ, 140 ரூபாய்க்கும் விற்பனையானது.ஏ.டி.

**வெயில் கொளுத்துவதால் கொப்பரை உற்பத்தி உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,04:45 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் உற்பத்தியாகும் தேங்காய் பருப்புக்கு, கேரளா உள்ளிட்ட வெளிமாநில எண்ணெய் ஆலைகளில் நல்ல மவுசு உண்டு. மாதந்தோறும் விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கேரளா பகுதி ஆலை அதிபர்கள் மற்றும் வியாபாரிகள், கொப்பரை கொள்முதல் செய்ய கோபிக்கு வருகின்றனர்.
சில வாரங்களாக தேங்காய் பருப்பு கிலோ, 39 முதல் 42 ரூபாய் வரை விற்கிறது. மழை, குளிர்காலங்களில் கொப்பரை காய வைக்க முடியாது; உற்பத்தி பாதிக்கும். நடப்பாண்டு மழையின்றி, கோடையைப் போல் வெயில் அடிப்பதால், தேங்காய் பருப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது.கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், நடப்பு வாரம் ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்சமாக, 42 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 39 ரூபாய்க்கும் ஏலம் போனது. நடப்பு வாரம் ஒரு ரூபாய் விலை அதிகரித்தது.

**மாநிலம் முழுவதும் தேயிலை உற்பத்தி குறைவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2012,00:26 IST

குன்னூர் : "தேயிலை உற்பத்தி செய்யும் அனைத்து மாவட்டங்களிலும் உற்பத்தி குறைந்துள்ளது,' என தெரிவிக்கப்பட்டது.
நீலகிரி மாவட்ட குன்னூர் தேயிலை வாரியத்தின் தகவல் படி, கடந்தாண்டு முதல் ஐந்து மாதத்தில் தேயிலை தூள் உற்பத்தி 3 கோடியே 88 லட்சம் கிலோ இருந்தது.இந்தாண்டு 3 கோடியே 73

லட்சம் கிலோவாக உற்பத்தி குறைந்துள்ளது.

கடந்தாண்டு மே மாதம் மட்டும் 1 கோடியே 10 லட்சம் கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த நிலையில், இந்தாண்டு நீலகிரியில் 88.2 லட்சம் கிலோ மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் தேயிலை உற்பத்தி செய்யும் அனைத்து மாவட்டங்களிலும் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது.

ஆனைமலை, கன்னியாகுமரி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும் தேயிலை உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை தமிழக தேயிலை தூள் உற்பத்தி 6 கோடியே 78 லட்சம் கிலோவிலிருந்து 6 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

கேரளாவிலும் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது. முதல் ஐந்து மாதங்களில் கடந்தாண்டை விட 22 லட்சம் கிலோ குறைந்துள்ளது.

உற்பத்தி குறைவு: தென்னிந்திய தேயிலை உற்பத்தி கடந்த 2011ம் ஆண்டை விட இந்தாண்டு 98 லட்சம் கிலோ குறைந்துள்ளது.

வட இந்தியாவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இங்கு தேயிலை உற்பத்தி ஒரு கோடியே 79 லட்சம் கிலோ குறைந்துள்ளது.

இந்திய அளவில் தேயிலை உற்பத்தி 24 கோடியே 36 லட்சத்திலிருந்து இந்தாண்டு 24 கோடியே 15 லட்சமாக குறைந்துள்ளது.

தேயிலை உற்பத்தி செய்யும் வேறு எந்த நாட்டிலும் 2 கோடியே 78 லட்சம் கிலோ தேயிலை உற்பத்தி குறையவில்லை.

தேயிலை வாரிய உறுப்பினர் டாக்டர் ராமு கூறுகையில், "ஆண்டின் துவக்கத்தில் பனி பொழிவு, ஏப்ரல் மாதத்தில் பெய்த ஆலங்கட்டி மழை, பருவ மழையின்றி வறட்சி போன்ற காரணங்களால் மகசூல் குறைந்துள்ளது;

வறட்சி தொடரும் பட்சத்தில் வரத்து குறைந்து, வரும் காலங்களில் மகசூல் மேலும் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தேயிலை உற்பத்தி செய்யும் அனைத்து பகுதிகளிலும் இந்த பாதிப்பு தென்பட்டுள்ளது,' என்றார்.

---

தினகரன்

## அரிசி, காய்கறியை தொடர்ந்து பருப்பு, எண்ணெய் விலை உயர்வு கடலை எண்ணெய் லிட்டர் ரூ.110

பதிவு செய்த நேரம்:2012-07-26 11:44:06

திருச்சி, : அரிசி, காய்கறிகளை தொடர்ந்து அத்தியாவசிய பொருட் க ளான பருப்பு, எண்ணெய் விலை கடுமையாக உயர்ந் துள்ளது. கிலோ பொட்டுக் கடலை ரூ.90க்கு விற்கப் பட்டு வருகிறது. அத்தியாவசிய பொருட் களின் விலை நாளுக்கு நாள் கடுமையாக உயர்ந்து வருகிறது. பொருளாதார சூழ்நிலையால் உயர்ந்த உணவு தானியங்களின் விலை தற்போது சரியான விளைச்சல் இல்லாத கார ணத்தால் மேலும் உயர்ந்து வருகிறது. துவரம் பருப்பு மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வருகிறது. துவரம் பருப்பு தேவையை விட வரத்து குறைவாக இருப் பதால் அதன் விலையும் உயர்ந்து கொண்டே செல் கிறது. தற்போது கிலோவுக்கு ரூ.20 வரையிலும் விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.68க்கு விற்ற கிலோ துவரம்பருப்பு முதல் ரகம் ரூ.78க்கும், ரூ.64க்கு விற்ற இரண்டாவது ரகம் ரூ.74க்கும், ரூ.62 க்கு விற்ற கிலோ உளுந்தபருப்பு ரூ.74க் கும், ரூ.64க்கு விற்ற கிலோ பாசிபருப்பு ரூ.74க்கும், ரூ.60க்கு விற்ற கிலோ கடலை பருப்பு ரூ.80க்கும் விற்கப் பட்டு வருகிறது.

பருப்பு வகைகளின் விலை உயர்வுக்கு காலம் தவ றிய மழைய காரணம் என கூறும் வியாபாரிகள், மழை யினால் திருச்சி மாவட் டங் களில் விலையும் உளுந்து விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டதால் தற்போது ஆந்திர மாநிலத்தில் இருந்து வரும் உளுந்து மட்டுமே விற்பனைக்கு வருவதாக வியாபாரிகள் தெரிவிக்கின் றனர். அதுவும் தற்போது கிலோவுக்கு ரூ.10 வரையி லும் விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.55க்கு விற்ற கிலோ தொழி உளுந்து ரூ.65க்கும், ரூ.64க்கு விற்ற முழு உளுந்து ரூ.74க்கும் விற்கப்பட்டு வருகிறது.

இதே போல் எண்ணெய் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ஒரு லிட்டர் ரூ.80க்கு விற்ற கடலை எண்ணெய் ரூ.110க்கும், ரூ.80க்கு விற்ற நல்லெண்ணெய் ரூ.110க்கும் விற்கபட்டு வருகிறது.

எண்ணெய் விலை ஏற்றத்தால் கடலை மாவு விலையும் ரூ.25 வரையிலும் ஏறி உள்ளது. கடந்த மாதம் ரூ.60க்கு விற்ற கடலை மாவு ரூ.85க்கும் விற்கப் பட்டு வருகிறது. இதே போல் கிலோ ரூ.60க்கு விற்ற பொட்டுக் கடலை ரூ.90க்கு விற்கப்பட்டு வரு கிறது.

உணவு தானிய விலை யில் எந்தவித மாற்றம் இல் லாமல் அதே விலையில் கடந்த 1 மாதமாக

கிலோ மைதா ரூ.30க்கும், கிலோ மல்லி ரூ.68க்கும், காஞ்ச மிளகாய் ரூ.85க்கும், புளி ரூ.100க்கும், சைனா பூண்டு ரூ.90க்கும், நயம்பூண்டு ரூ.110க்கும், கிலோ சீனி ரூ.40க்கும் விற்கப்பட்டு வருகிறது.

அரிசி மற்றும் காய்க றிகள் விலையை தொடர்ந்து அத்தியாவசிய பொருட் களான பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள் விலை உயர்வால் நடுத்தர மக்க ளும், ஏழை, எளிய மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

## வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ81 லட்சம் மதிப்புள்ள மஞ்சள் ஒரே நாளில் ஏலம்

பதிவு செய்த நேரம்:2012-07-26 11:02:31

சேலம், : சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஒரே நாளில்
வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்
சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு
81 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் நடந்தது. குவிண்டாலுக்கு வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்
சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு
1900 வரை கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
சேலம் பள்ளப்பட்டியில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செவ்வாய்தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்திற்கு மொத்தம் 2242 மூட்டை மஞ்சள் கொண்டு வரப்பட்டது.
இதற்கு முந்தைய வாரங்களில் நடந்த ஏலத்தைக் காட்டிலும், விரலி ரக மஞ்சள் குவிண்டாலுக்கு
வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்
சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு
4599 முதல் வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்
சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு
8199 வரையிலும், குண்டு ரக மஞ்சள் குவிண்டாலுக்கு வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்
சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு
4590 முதல் வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்
சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு

7200 வரையிலும், பனங்காலி ரக மஞ்சள் குவிண்டாலுக்கு வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்

சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக  ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு

8500 முதல் வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்

சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக  ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு

9800 வரையிலும் ஏலம் போனது. ஒரே நாளில் மொத்தம் வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத்தலைவர் வெள்ளையன் தகவல்

சுதந்திரத்தினத்தன்று உலகவர்த்தக  ஒப்பந்த நகல் தீவைத்து எரிப்பு

81 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டது.

ஏலம் முடிந்ததும் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணப்பட்டுவாடா செய்யப்பட்டதாலும், மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்ததாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## வெண் பன்றி வளர்ப்பு 30ம் தேதி இலவச பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-07-26 10:19:48

கரூர், : கரூர் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வெண் பன்றி வளர்ப்பு பயிற்சி வரும் 30ம் தேதி ஒரு நாள் நடைபெறுகிறது.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் அன்று காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வரவேண்டும். 04324 294335 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த தகவலை மையத்தின் இணை பேராசிரியர் செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

## 10,000 ஏக்கர் சாகுபடி பாதிப்பு வறண்டது அமராவதி ஆறு தண்ணீரை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருப்பு

பதிவு செய்த நேரம்:2012-07-26 10:18:59

அரவக்குறிச்சி, : அமராவதி ஆறு வறண்டதால், அரவக்குறிச்சி பகுதியில் 10,000 ஏக்கர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. தண்ணீரை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகில் அமைந்துள்ள அமராவதி அணை. 90 அடி உயரம், 3039.92 மில்லியன் கன அடி மொத்த கொள்ளளவு கொண்டது. தற்போது அணையின் நீர்மட்டம் 32.2 அடி. இந்த அணையின் மூலம் கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட

மாவட்டத்தை சேர்ந்த பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் பெறுகிறது. கரூர் மாவட்டத்தில் மட்டும் 17,000 ஏக்கருக்கு மேல் பயனடைகிறது.

அரவக்குறிச்சி வட்டத்தில் கொத்தப்பாளையம், சின்னதாராபுரம், ராஜபுரம் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட வருவாய் கிராமங்களில் 10,000 ஏக்கருக்கு மேல் வாழை, சூரியகாந்தி, பருத்தி, சோளம், கம்பு போன்ற பணப் பயிர்களை அமராவதி பாசன விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். அமராவதி ஆற்று நீரை எதிர்பார்த்து விவசாயிகள் மஞ்சள் விதைக்க காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் அமராவதி நீர்பிடிப்பு பகுதியில் எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால் அமராவதி அணைக்கு நீர்வரத்து தற்போது 124 கன அடி மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. கரூர் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாட் டை போக்க பொதுமக்கள், பல்வேறு பொது அமைப்பினர் அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக ராஜபுரம் ஊராட்சி தலைவர் பழனிச்சாமி கூறுகையில், ஆடி பட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள வாழை, பருத்தி, சோளம், கம்பு, சூரியகாந்தி உள்ளிட்ட பல பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலையில் உள்ளது. இந்த பகுதியில் மஞ்சள் பயிரிடும் விவசாயிகள் விதை மஞ்சளுடன் நடவு செய்ய அமராவதி தண்ணீரை எதிர்பார்த்து தயாராக உள்ளனர். ஆற்றில் தண்ணீர் இல்லாததால் இந்த பணி தாமதமாகிறது. இதனால் குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு விதை மஞ்சள் விணாகி விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். தற்போது மஞ்சள் நடவு செய்யாவிட்டால் வரும் பொங்கலுக்கு மஞ்சள் கிழங்கு தட்டுப்பாடாகும் என்றார்.

## தானியங்கும் நாற்று நடும் இயந்திரம் செயல்விளக்கம் கலெக்டர் ஆய்வு

பதிவு செய்த நேரம்:2012-07-26 10:53:11

அரியலூர், : அரியலூர் மாவட்டம் திருமானூர் அருகே திருமழபாடியில் வேளாண் பொறி யியல் துறை சார்பில் ரெட் லேண்ட் அஸ்லின் மோட் டார் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 2 வகை தானியங்கும் நாற்று நடும் இயந்திரங்கள் குறித்த செயல் விளக்கம் நேற்று நடைபெற்றது. இதனை கலெக்டர் அனுஜார்ஜ் பார்வையிட்டார்.

40 விவசாயிகளுக்கு நெல் நாற்றங்கால் தட்டுகள் மூலம் தயாரிப்பது குறித்து செய்து காண்பிக்கப்பட்டது. இதில் குபேட்டா நடவு இயந்திரம் மற்றும் ரெட் லேண்ட் நடவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

இதுகுறித்து கலெக்டர் அனுஜார்ஜ் கூறியதாவது: ரெட் லேண்ட் நடவு இயந்திரத்தின் மொத்த மதிப்பீடு ரூ.3 லட்சத்தில் 50 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த இயந்திரம் 1 ஏக்கருக்கு 1 மணி நேரத்தில் 8 வரிசைகளில் நாற்று நடும் பணியினை செய்கிறது. இந்த இயந்திரத்தை இயக்குபவர் அமர்ந்து கொண்டு இயக்கலாம். இதே போன்று குபேட்டா நடவு

இயந்திரத் தின் மொத்த மதிப்பீடு ரூ.1.75 லட்சத்தில் 50 சதவீ தம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இந்த இயந்திரம் ஒரு ஏக்கருக்கு ஒன்றே முக்கால் மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை 4 வரிசைகளில் நாற்று நடும் பணியினை செய்கிறது. இந்த இயந்திரம் செயல்படுவதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ.2,500 வசூலிக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தை இயக்குபவர் கருவியுடன் நடந்து சென்று இயக்க வேண்டும்.

இக்கருவிகளின் மூலம் நடவு செய்வதால் சமமான இடைவெளியில் ஒரே அளவில் நாற்று நடப்படுகிறது. இதனால் அதிக தூர்கள் வளர ஏதுவாகிறது. இக்கருவிகள் மூலம் களையெடுக்கும் பணி எளிதில் செய்ய முடிகிறது. இவ்வாறு கலெக்டர் அனுஜார்ஜ் கூறினார்.

நிகழ்ச்சியில் வேளாண் பொறியில் துறை செயற்பொறியாளர் மணி, உதவி செயற்பொறியாளர் மோகனகிருஷ்ணன், உதவி பொறியாளர் நெடுமாறன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---